<u>செய்தி வெளியீடு எண்.435</u> <u>நாள்.13.7.2007</u>

<u>செய்தி வெளியீடு</u>

அரசு ஆணை பல்வகை எண்.16, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் ( ஜி ) துறை, நாள் 21.2.2006ன்படி அரசு பணியில் இருக்கும்பொழுது மரணம் அடையும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு இருந்த தடை ஆணையை நீக்கி ஆணை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அரசுப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக அறிவுரைகளை அரசு ஆணை பல்வகை எண்.61, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு ( க்யூ1 ) துறை, நாள் 19.7.2006ன்படி வழங்கப்பட்டன.

மேற்கண்ட அரசு ஆணைகளில் ஏற்கனவே அரசுப்பணியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு வழங்கப்பட்ட தடை ஆணையை நீக்கி வழங்கப்பட்ட ஆணைக்கிணங்க, கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் கரூர், கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றிய திரு என்.பெரியண்ணன், சிறப்பு நிலை அலுவலக உதவியாளர் கடந்த 4.12.2001ம் தேதி அன்று காலமானதைத் தொடர்ந்து, அவருடைய வாரிசுதாரும், மகனுமாகிய திரு பெ.வேல்முருகன் என்பவர் கரூர் கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஏற்கனவே காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பணியமர்த்தி, பணி நியமன ஆணை மற்றும் மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் உள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலை 1984ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. அரசு கருணை அடிப்படையிலான பணி நியமனம் விரைந்து வழங்கிட ஆணையிட்டதனைத் தொடர்ந்து, இவ்வாலையில் தொழிலாளர்களாகப் பணியாற்றி, பணிக்காலத்தில் இயற்கை எய்திய 12 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணியமர்த்தி மொத்தம் 13 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் இன்று (13.7.2007) நேரடியாக வழங்கப்பட்டது.

***

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.

இணைப்பு

கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்ட வாரிசுதாரர்களின்

விவரம்

| வ. எண் | கருணை அடிப்படையில் பணிநியமனம் அளிக்கப்பட்ட வாரிசுதாரரின் பெயர் திருவாளர்கள்/திருமதி | இயற்கை எய்திய தொழிலாளியின் பெயர் திருவாளர்கள் | உறவு முறை |
|---|---|---|---|
| 1. | பெ.வேல்முருகன் | என்.பெரியண்ணன் | மகன் |
| 2. | வி.ராஜமணி | ஆர்.விஜயராசு | மனைவி |
| 3. | இ.வசந்தி | கே.இளங்கோவன் | மனைவி |
| 4. | எ.மதிசூரியன் | ஜி.ஆறுமுகம் | மகன் |
| 5. | ஆர்.சந்திரசேகரன் | பி.ராமஜெயம் | மகன் |
| 6. | பி.திருக்குமரன் | வி.பாலசுப்பிரமணியன் | மகன் |
| 7. | எ.திருச்செல்வம் | வி.அழகுரத்தினம் | மகன் |
| 8. | ஆர்.யுவராஜா | கே.ரத்தினசாமி | மகன் |
| 9. | எ.கோபாலபாண்டியன் | எ.ஆரான் | மகன் |
| 10. | என்.ராஜபாண்டியன் | எம்.நீலமேகம் | மகன் |
| 11. | எஸ்.திருப்பதி | டி.செல்வராஜ் | மகன் |
| 12. | ப்பி.கமலஉறாசன் | ஆர்.பரமசிவம் | மகன் |
| 13 | கே.சண்முகராஜ் | வி.கனகரத்தினம் | மகன் |